REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 271

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: சித்திரை 16உ புதன் (28—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 17உ வியாழன் (29—4—54)

நாடு முன்னேற வேண்டுமானால்.....

— (:) —

கூட்டுறவு இயக்கம் வளரவேண்டும்

முறையில் குறையில்லை—மக்கள் மன நிறையில் குறை உண்டு

இளைஞர்கள் ஈடுபட பொதுச்செயலாளர் அண்ணா அறிவுரை

"மேல் நாட்டவர் தந்த கூட்டுறவு முறை இந்த நாட்டிலே, எதிர்பார்க்கும் அளவுக்கு சிறப்பாகப் பரவாததற்குக் காரணம் என்ன? பெங்களூர் போன்ற குளிர்ச்சிப் பிரதேசத்தில் பயிராகும் செடி கொடிகள், மாறுபட்ட சீதோஷ்ண நிலையுள்ள இடங்களில் பயிராவதில்லையே? ஏன்? பயிராகும் இடங்களின், மாறுபட்ட மண் வளமும், வெப்ப தட்ப நிலையுந்தானே? அதைப்போன்றே இந்த நாட்டவரின் அறிவுக்கும், வேறு பல வெளி நாட்டவரின் அறிவுக்குமிடையில் உள்ள மன வள வேற்றுமைதானே, கூட்டுறவு முறை போன்ற சிறந்தவை எல்லாம் இந்த நாட்டு மக்களால் போற்றி வளர்க்கப்படாம லிருப்பதற்குக் காரணம்?"

"மேலை நாடுகளிலே இந்த கூட்டுறவு முறை, கைக்கொள்ளப்படும்போது, இது ஒரு பெரும் புரட்சி என அந்த நாட்டு மக்கள் கருதியதுண்டு. கொள்ளை லாபம் கொள்ளும் முதலாளிகள், கடமை கருதி உழைக்கும் தொழிலாளி இவர்களிடையே மனப் போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கூட்டுறவு முறையால், லாபம் முழுவதையும் தனியொரு முதலாளி பெறும் நிலை மாறி, நாட்டவர் பலருக்கும் லாபத்தில் பங்குண்டு, என்னும் நிலை வளரும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். நம்மிடையே அந்தப் புரட்சிப் பண்பில்லை. இங்கு, கூட்டுறவு முறை வெறும் போலி கௌரவத்திற்காக, வளர்க்கப்படும் நிலை நிலவுகிறது. ஏதோ ஒரு கோவிலின் தர்மகர்த்தாவாக இருப்பதைப் பெருமை என்று சிலர் எண்ணுவது போன்றே, கூட்டுறவு சங்கச் செயலாளராக, தலைவராக இருப்பதையும் எண்ணுகின்றனர். அது தவறு. அந்நிலை வளராது, நன்முறையில் கூட்டுறவு இயக்கம், வளர்க்கப்படுமானால், அது நாட்டு மக்கட்குப் பெரும் பயன் தரும்."

—என்று, செயங்கொண்டம் கூட்டுறவு இயக்கப் பொன் விழாக் கூட்டத்தில் கலந்து சொற்பொழிவாற்றிய தி.மு.கழகப் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியதாவது:—

"கூட்டுறவு இயக்கத்தின் பொன்விழா நிகழ்ச்சி நம் நாட்டின் பல இடங்களிலும் நடைபெறுகின்றது. அரசியல் கண்ணியம் வளர்க்கும் நிலையில் இங்கு என்னை அழைத்த நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் ஒரு அரசியல கட்சியை சார்ந்திருந்தாலும் அரசியல் நாகரிகம் விரும்புவதால்தான் இப்பொழுது பிரச்சினை பற்றிய இந்த நிகழ்ச்சியில் பேச ஒப்புக்கொண்டேன். பொதுவாக மக்களுக்கு கூட்டுறவு பற்றி விழா காலத்திலேதான் தெரியும். சாதாரண மக்களுக்கு அதிகமாக கூட்டுறவு முறை பற்றித் தெரியாது. தெருக்கோடியிலே தினமும் நடக்கும் நடைபாதையிலே, ஒரு மரம் நெடுங்காலமாக இருக்கிறது. அது பழம் தரும் மரமா? காய் காய்க்கும் மரமா? பூ மட்டும் அளிக்கும் மரமா? என்று தெரியாமலிருப்பது போல நம் நாட்டு மக்களுக்கு 50 ஆண்டுகளாகியும் தெரியாது, கூட்டுறவு முறை என்று ஒன்றிருப்பது. அதனால்தான், அதை விளக்க—வரலாற்றை போதிக்க நடைமுறையை குறித்து அதுபற்றி அறிவிக்க, இவ்விழா நடைபெறுகின்றது.

கூட்டுறவு முறை மேல் நாட்டின் அறிஞர்கள் தந்த கருத்துக்களில் இருந்து நமக்கு கிடைத்த ஒன்று வெளிநாட்டார் கண்ட பிறகு தான் நமக்கு இந்த அரிய கருவூலம் பயன்படுகிறது.

கூட்டுறவு முறை நெசவு தொழிலுக்கு மட்டுமல்ல; பல்வேறு தொழிலுக்கும் பயன்படுகிறது. வீடுகட்டிடவும், நிலம் வாங்கவும், நிலங்களை அடமானம் வைக்கவும், பால் பண்ணை வைக்கவும் பயன்படுகிறது.

இக்கூட்டுறவு முறை 50 ஆண்டுகாலமாக நீடித்து இருக்கிறது என்றால் ஆச்சரியந்தான். மேலும் மேலும் கூட்டுறவு முறை வளர வேண்டுமானால் மக்களுக்கு அக்கரை பிறந்து பாட்டாளி மக்களுக்கு அது சொந்தம் என்ற நிலை வரவேண்டும். உழைக்கும் பாட்டாளி மக்கள் லாபம் கிடைக்கும் இடமாக, அதைக் கருத வேண்டும். அப்பொழுதுதான் நல்ல பலனை கொடுக்கும். இந்தியாவிலேயே கூட்டுறவு முறை தென்னாட்டிலே, இத் தமிழகத்திலேதான் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கின்றது நல்ல பலனை ஓரளவு தந்திருக்கின்றது. சென்னையைக் கண்டுதான் வடநாடு பரிசீலனை செய்கிறது.

இந்த திட்டத்தை இன்று நாடாளும் காங்கிரஸ் ஆட்சியினருக்கு முன்பு ஆண்டவர்களும் வளர்த்தனர்.

நாங்கள் வளர்த்த இயக்கம்!

"இந்தக் கூட்டுறவு முறையை முன்பு நான் சார்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி செய்யும்பொழுது நல்ல முறையில் வளர்த்தது. அதை இன்று காங்கிரஸ் சர்க்கார் கவனிக்கிறது. வளர்த்த குழந்தையை செவிலித் தாயிடம் கொடுத்துத் தாய் கவனிப்பதைப் போல ஜஸ்டிஸ் கட்சி பாலூட்டி வளர்த்த இக்கூட்டுறவு முறை காங்கிரஸ் செவிலித் தாயால் வளர்க்கப்படும்பொழுது அக்கரையுடன் கவனிக்கிறோம் நாம். ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களால் வளர்க்கப்பட்ட இந்த இயக்கம் காங்கிரஸ்சர்க்காரால் கவனிக்கப்படாமல் இல்லை. நாட்டு மக்களுக்கு நல்ல பற்றுதல் உண்டாக, பொது அறிவு அதிகமாக, உடை, உணவு, இடப் பஞ்சம் நீங்க, பல்வேறு துறையிலும் பெரும் ஊக்கம் காட்டி கூட்டுறவு முறை வளர்க்கப்பட வேண்டும். சாதாரண காலத்திலேதான் கூட்டுறவு முறை இங்கு பயன்படுகிறது. பொதுவாக நெசவாளர்களுக்கு இந்த முறை உதவி இருக்கிறது. ஆனால், நாடு பூராவும் பஞ்சத்தால் வாடும்பொழுது கூட்டுறவு

(4-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் வேண்டும்!

— (:) —

சிதறிக் கிடக்கும் இந்தி மொழிப் பகுதிகளை டில்லியோடு இணைக்கவும்

பஞ்சாப் சர்வ கட்சிக் குழு கோரிக்கை!

பாட்டியாலா, ஏப். 25—

மாநில புனரமைப்புக் குழுவினரிடம், பஞ்சாப் மாநில அமைப்புக் குழுவினர், பஞ்சாப் பெப்சு ஆகிய மாநிலங்களில் உள்ள பஞ்சாபி மொழி பேசப்படும் பிரதேசங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு புதிய பஞ்சாபி மொழி பேசும் மாநிலம் காண வேண்டுமெனக் கோரியுள்ளது.

கடந்த அக்டோபரில் ஜலந்தரில் நடைபெற்ற பஞ்சாப் மாநில அமைப்பு சர்வ கட்சி மாநாட்டினரால் நியமிக்கப்பட்ட அந்தக் குழு, மாநில புனரமைப்புக் குழுவினரிடம், பஞ்சாப், பெப்சு ஆகிய மாநிலங்களில் உள்ள பகாரி மொழி பேசப்படும், மலைப் பாங்கான மாவட்டம் பிரதேசங்களை, கோமான், கர்வால், முதலியவை வரை விஸ்தரிக்கக்கூடிய இமாலயப் பிரதேச மாநிலத்துடன் இணைக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது. அக்குழு மேலும், பஞ்சாப், பெப்சு, டில்லி ஆகிய மாநிலங்களிலும், உத்திரப் பிரதேசத்தின் மேற்கத்திய மாவட்டங்கள் இவைகளுடன் ராஜஸ்தானை அடுத்துள்ள மாவட்டங்கள் இவைகளில் உள்ள இந்தி பேசப்படும் பிரதேசங்களை ஒன்றாக இணைத்து, டில்லியைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய மாநிலமும் உடனடியாக அமைக்க வேண்டுமெனவும் மாநில புனரமைப்புக் குழுவிடம் கோரியுள்ளது.

கல்வி முறையில் தலை கீழ் மாற்றம் கூடாது!

— (:) —

அரசியல் வாதிகள் கல்வித் துறையில் குழப்பம் விளைவித்தல் ஆகாது!

—]o[—

நீண்ட கால கல்விக் குழு அமைக்க வேண்டும்

ஹுமாயூன் கபீர் அறிவுரை

பெங்களூர், ஏப். 25—

"கல்வியில் செய்யப்படுகிற எந்த ஒரு மாறுதலும் வெகு மெதுவாகவே செய்யப்பட வேண்டும். இன்று இருக்கிற கல்வி முறையை ஒரே நாளில் தூக்கி எறிந்துவிட்டு புதிய ஒன்றை திடீரெனப் புகுத்துவது முடியாத ஒன்றாகும். குழந்தைகளின் வாழ்வை, அப்படிச் செய்வதின் மூலம், சோதிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது."

"பள்ளிக்கூடங்கள், அரசியல்வாதிகள், சட்டசபைகள் இவைகளின் ஏஜென்சிகளாய் மாறிவிடாதபடி, கல்வி நிபுணர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அவர்கள் இஷ்டப்படி தரப்படும் கல்வி, முடிவில் கல்வியாகவே இருக்காது."

—என்று, மாநில கல்விக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எல்லா மைசூர் கல்வி மாநாட்டைத் துவக்கி வைத்து, யூனியன் கல்வி இலாகாவின் ஆலோசகர் ப்ரொபசர் ஹுமாயூன் கபீர் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "இந்த ஆபத்து அமெரிக்காவில் தவிர்க்கப்பட்டுள்ளது. அங்கு 11 முதல் 15 வரையுள்ள அங்கத்தினர்களைக் கொண்ட கல்விக் குழுக்கள் மட்டும், கல்வி போதிக்கும் வேலையைக் கவனிக்கின்றன. உயிருடனிருக்கின்ற வரையில் உறுப்பினராயிருக்கின்ற காரணத்தால், அவர்கள், கல்விக்கண்ணோட்டத்துடன் பிரச்னையைக் கவனிக்கின்றனரே யல்லாது, தான் தேர்ந்தெடுக்கப்பட்டதின் அடிப்படையில் அல்ல அதைப் போன்றே இங்கும் நீண்ட காலம் வேலை செய்யும் கல்விக் குழுக்கள் அமைக்க வேண்டும்.

இப்போதுள்ள கல்வி முறையில சில குறைகள் இருக்கலாம். ஆனால், அதற்காக, மொத்தக் கல்வியே சீர்கேடானது என்று சொல்வது தவறு. ஏராளமு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 28—4—54 புதன்

ஜெனிவா கூத்து!

ஜெனிவாவில் அணுகுண்டிலும், நீர்வளி குண்டிலும் நம்பிக்கை வைத்து, நினைத்ததை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற, அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், பொதுவுடைமை சீனு முதலிய பேரரசுகளும், மற்றும் சில சிறு சிறு நாடுகளின் பிரதிநிதிகளும், கூடி இருக்கிறார்கள். அவர்கள் மாநாடு நடைபெறும் இடமோ, முன்னால் நடைபெற்ற முதல் உலகப் போரின் பின் விளைவாக உருவான சர்வதேச சங்கக் கட்டிடத்திலாகும். இரண்டாவது உலகப் பெரும் போரைத் தடுக்க அந்தச் சங்கம் துணை செய்ததா என்றால், அதுதான் இல்லை. பெரும் போர் மூளுவதற்கான தூண்டுதலை அச்சங்கம் மறைமுகமாகத் தூண்டுதல் அளித்தது எனக் கூறுவது மிகையாகாது. எனவே, அந்தச் சங்கம் உயிரோடு இருந்த காலத்தில் இயங்கிவந்த கட்டிடத்தில், கூடும் பேரரசுகள் மாநாடு, முடிவு காண இருக்கும் விஷயங்களில், வெற்றி காணுமா தோல்வியுறுமா என்பதில், பெரும்பான்மையினர் ஐயம் கொள்வது எதிர்ப்பார்க்கக் கூடியதேயாகும்.

மாநாட்டில் முடிவு காண இருக்கும் விஷயங்கள் இரண்டு ஒன்று வடகொரியா தென்கொரியா இணைப்பும் பற்றியது. மற்றொன்று இந்தோ - சீனுவின் எதிர்காலம் பற்றியது.

சென்ற திங்களுக்கு முன் ஜெர்மன் இணைப்பை நடைமுறைக்குக் கொண்டுவர, பொதுவுடைமை சீனு நீங்கலாக, மற்ற நான்கு பேரரசுகளும் பெர்லின் நகரில் கூடின. ஒன்றை ஒன்று காரசாரமாகத் தாக்கிக்கொண்டன. ஏராளமான செய்திகள், உலக மக்களுக்குப் படிக்கத் தரப்பட்டன. ஆனால், முடிவு என்னமோ, பிளவுபடுத்தப்பட்ட ஜெர்மனி நாடு, பிளவுபட்டதாகவே விடப்பட்டுவிட்டது.

பெர்லின் மாநாடு ஜெனிவா மாநாட்டைப் பெற்றெடுத்தது. மூலக் கொள்கையில் முடிவு காண்பதில் தோல்வி ஏற்பட்டபோதிலும், வேறு சிக்கலைப் பற்றிப் பேசுவதற்கான வாய்ப்புத் தரும் ஜெனிவா மாநாட்டிற்கு வெற்றி ஏற்பட்டதே என்பதில், தங்கள் மகத்தான சாதனையைப் பேரரசுகள் தற்பெருமையாகப் பீத்திக்கொண்டன.

பேரரசுகள் பட்டியலில் பொதுவுடைமை சீனுவையும் சேர்த்துக் கணக்கிட வேண்டுமென, சோவியத் ரஷ்யா, ஜெனிவா மாநாட்டுத் தடுப்புப் பிரசார குண்டு ஒன்றை வீசி எறிந்தது. குண்டு வெடித்ததும் வெடிக்காததுமாக இருக்கும் நிலையிலேயே, அமெரிக்க டல்லஸ், 'அது முடியாது' என பதில் மறை சாற்றினர். இதனால் மாநாடு குறிப்பிட்டபடி கூடாமலேயே போய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டது.

மாநாட்டிற்குப் பேரரசுகளே தலைமை வகிக்க வேண்டும் என்ற நினைப்பில் சிறு மாற்றம் செய்ய அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் ஆலோசனை கூறியது. அதைத் தட்டிக் கழிக்காமல் சோவியத் ரஷ்யாவும் அதற்கு இணக்கம் காட்டியது. எனவே மாநாடு, மங்களமாகத் துவங்கிவிட்டது.

அதாவது ஒரு நாளைக்குத் தாய்லாந்தும், மறுநாளைக்கு சோவியத் ரஷியாவும், அதற்கு அடுத்த நாளைக்கு பிரிட்டனும் என்ற முறையில் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவது என்ற ஏற்பாடுதான், மாநாடு துவக்கத்திலேயே முறிந்துவிட இருந்ததைத் தடுத்து நிறுத்த உதவி செய்ததாகும்.

கொரியா இணைப்புப் பிரச்னையில் முடிவு காணும் பணியை முதற்கண் மேற்கொண்டு இருக்கிறது மாநாடு. முரண்பட்ட கோரிக்கைகள், பிளவுபட்டுக் கிடக்கும் இரு கொரியாவின் சார்பிலும் சொல்லப்படுகின்றன. தங்கள் தங்கள் ஆதிக்கத்தை விட்டுக்கொடுக்க மனமொப்பாமல், சிக்கலை மட்டும் போக்கிக்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளுவதில் முழு வெற்றியை எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே, கொரிய பிரச்னையில் முடிவு ஏற்படாமல், எப்பொழுதும்போல் சிக்கலானதாகவே இருந்துவிடுமானால், அதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், பின்விளைவாக, மீண்டும் கொரியாவில் போர் மூளும் என்பதுமட்டும் உறுதியாகும்.

இந்தோ - சீனு எதிர்காலம் பற்றி மாநாட்டில் பேசப்படுவதென்பது, கொரிய பிரச்னை விவாதத்தினால் வெளியாகும் முடிவைப் பொறுத்து இருக்கிறது. முதல் விஷயத்திலேயே தகராறு முற்றிவிட்டால், இரண்டாவது விஷயத்தைப் பற்றிப் பேச இடமேது?

கொரிய பிரச்னையில் முடிவு ஏற்படாமல் போனாலும் பாதகமில்லை; இரண்டாவது பிரச்னையான, இந்தோ-சீனுவை ஆலோசிப்போம் என பேரரசுகள் முடிவிற்கு வந்தாலுமவாக் கூடும்.

இந்தோ - சீனுவின் எதிர்காலம் பற்றி முடிவு எடுக்க ஜெனிவாவில் சமாதான மாநாடு கூடுகிறது. ஆனால், அதே நேரத்தில் இந்தோ - சீனத்தில் வியட்நாமும், பிரெஞ்சு படைக்கும் கடும் போராட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. எந்த நாட்டின் சமாதானத்திற்காகப் பேசப்படுகிறதோ, அதே நேரத்தில், அந்த நாட்டில் போர் கடுமையாக நடந்து கொண்டும் இருக்கிறது; ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டும் இருக்கிறது. பேரரசுகளின் சமாதானே ஆர்வமே ஆர்வம்!

பொதுவுடைமை சீனுவின் ஆயுத பலமும், ஆள் பலமும் வியட்நாமுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தவண்ணம் உள்ளன. அதுபோலவே, அமெரிக்காவின் ஆயுத பலம் பிரெஞ்சுப் படைக்கு துணை செய்கிறது.

ஜெனிவாவில் சமாதான மாநாடு நடைபெறுகிறது— பேச்சு வார்த்தை நடந்தவண்ணம் இருக்கிறது! என்ன விசித்திரமான நிலை! வேதனை தரும் அரசியல் கூத்து!

அசாம்—மணிப்பூர் இணைப்புக்கு எதிர்ப்பு

திரிபுரா நகர காங்கிரஸ் கோரிக்கை

இம்பால், ஏப். 25—

அசாம் மாநிலத்துடன் மணிப்பூரைச் சேர்ப்பது கூடாது என்று, மணிப்பூர் திரிபுரா காங்கிரஸ் கமிட்டிகள் தெரிவித்துள்ளது. மாநில புனரமைப்புக் குழுவினரிடம் மணிப்பூர் காங்கிரஸ் தந்துள்ள அறிக்கையில், எப்போதும்போல் மணிப்பூர் தனி மாநிலமாகவே இருக்க வேண்டுமெனவும், அதை அசாம் மாநிலத்துடன் இணைக்கலாகாது எனவும் கோரியுள்ளது; முதலில் 10 ஆண்டுகளுக்காவது மணிப்பூர் தனித்துத்தான் இருக்க வேண்டுமென திரிபுரா காங்கிரஸ் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

திலகர் நிதி வழக்கு

— (:) —

பிள்ளையும் பேரப் பிள்ளைகளும் தொடுத்தனர்

— (:) —

'சுயராஜ்ய நிதி'க்கு வாரிசு நாங்களே!!

நிதிக் கமிட்டி மீது புகார்

பூனா ஏப். 27—

லோகமான்ய திலகர் திரட்டிய சுயராஜ்ய நிதி பற்றிய ருசிகரமான வழக்கு, இப்போது பம்பாய் ஹைகோர்ட்டில் தொடுக்கப்பட்டிருக்கிறது.

திலகர், சுயராஜ்யம் பெறுவதற்கான காரியங்களுக்காக என்று கூறி, நாட்டு மக்களிடம் ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டி வைத்தார்.

1916-ம் ஆண்டு, இந்த நிதி ஏற்பாடு நடைபெற்றது.

1920ல் திலகர் காலமானார்.

திலகர் திரட்டிய 'சுயராஜ்ய நிதி' சுயராஜ்யம் பெறுவதற்காகச் செலவிடப்பட வேண்டும்-அதற்கான செலவு போக மீதமிருக்கும் தொகை, எமக்குத் தரப்பட வேண்டும் என்று திலகரின் குமாரர்களில் ஒருவரான ராமச்சந்திர திலக் என்பவரும், ஜெயந்த்திலக், ஸ்ரீகாந்த திலக் எனும் பேரப்பிள்ளைகளும், பம்பாய் ஹைகோர்ட்டில் வழக்கு தொடுத்துள்ளனர்.

சுயராஜ்யம் கிடைத்துவிட்டது-சுயராஜ்யம் கிடைத்த பிறகு, திலகர் நிதியை இதர காரியத்துக்குச் செலவிடக் கூடாது, மீதித் தொகைக்கு நாங்களே "வாரிசுகள்" எனவே எங்களிடம் ஒப்படைக்க வேண்டும், என்று திலகரின் பிள்ளையும் பேரப் பிள்ளைகளும் வழக்கிலே குறிப்பிட்டுள்ளார்கள்.

திலகர் நிதிக் கமிட்டியார், சரியான கணக்கு வழக்குகளை ஒப்புவிக்கவேண்டும் என்றும் கோரியிருக்கிறார்கள்.

வழக்கு முடிவாகும் வரையில், திலகர் கமிட்டியார், நிதி சம்பந்தமாக எந்தக் காரியமும் செய்யக்கூடாது என்று தடை விதிக்கக் கேட்டிருந்தனர். கோர்ட்டாரும் அவ்விதமே தடை விதித்துள்ளனர்.

பொதுவான கலை, நாகரீகம் நிலவும் பகுதிகளை ஒன்றுக்குக!

ராஜஸ்தானுடன் ஆஜ்மீர், முதலிய பகுதிகளை இணைக்க கோரிக்கை

ஜெய்பூர், ஏப். 24—

ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் கமிட்டி, இப்போதுள்ள 1,31,000 சதுர மைல் பரப்போடு இன்னும் 10,000 சதுர மைல் பரப்புள்ள பகுதிகளையும் ராஜஸ்தானுடன் இணைக்க வேண்டுமென, மாநில புனரமைப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்போது அதுவே இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலமாகும்.

பொதுவான சரித்திரம், மொழி, கலை இவைகள் ராஜஸ்தானத்தைப் போன்று, உள்ள பகுதிகளை எல்லாம் ராஜஸ்தானத்துடன் சேர்க்க வேண்டுமென காங்கிரஸ் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமானால், ஒரு கோடியே 53 லட்சமாக உள்ள அதன் ஜனத்தொகை இன்னும் 10 லட்சம் அதிகமாகலாம்.

பம்பாயுடனுள்ள தந்த, பனாஸ்பூர், முதலிய, முற்கால ராஜபுதனத்தின் முக்கிய நகரங்களை' சரித்திர ஆதாரங்களைக் காட்டி' ராஜஸ்தானுடன் இணைக்குமாறு, அப்பிரதேச காங்கிரஸ் கோருகிறது. மேலும் பூகோள ஒற்றுமை, கலாச்சார ஒற்றுமை இவைகளைக் காட்டி, பம்பாயில் உள்ள அபூரோடு, தாலுகாவையும், கண்டன் துறை முகத்துடன் கூடிய கட்ச், 1 600 சதுர மைல் பரப்புள்ள அஜ்மீர் ராஜ்யம் இவைகளையும் ராஜஸ்தானுடன் இணைக்க வேண்டுமென மேற்படி காங்கிரஸ் கேட்டுள்ளது. மேலும் கிழக்கு பஞ்சாபில் உள்ள பெரஜபூர், பெப்சுவில் உள்ள நாருல் ஆகிய மாவட்டங்களும் ராஜஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளதாம் அந்தக் காங்கிரஸ்.

நேரு பொதுக்கூட்டம் ரத்து எதிரொலி

இ. இ. காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கும்

கொழும்பு, ஏப். 27—

மே 1-ந் தேதி கம்போலாவில் தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் நேரு பேசுவதாக இருந்ததை இலங்கை சர்க்கார் ரத்து செய்ததை ஆட்சேபித்து இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவர் தொண்டைமான் விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:—

"கம்போலா தொழிலாளர் கூட்டத்தில் நேருவை பேசவொட்டாமல் இலங்கை பிரதமர் செய்தால் பிரஜா உரிமையை அநியாயமாக நசுக்குவதையும் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதையும் எதிர்த்து இலங்கை இந்தியர் காங்கிரஸ் தனது எதிர்ப்பைக் காட்டத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுக் கணக்குகள் பரிசீலனைக் கமிட்டி, இன்று புதுடில்லியில் பார்லிமெண்ட் கட்டிடத்தில் கூடி, கல்கத்தாவிலுள்ள டெலிபோன் உற்பத்திசாலை சம்பந்தமான கணக்குகளை மேற்கொண்டு பரிசீலனை செய்தது.

கூடகு தனலட்சுமிக்கு ஒரு போட்டி!

— (:) —

9 மாதங்களாகத் தண்ணீர் மட்டுமே குடிக்கிறாளாம்!

—o—

வாரங்கல் சுசிலா பற்றி ஒரு கம்யூனிஸ்ட்

சிகந்தராபாத், ஏப். 27—

வாரங்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மட்பாலகூடம் கிராமத்திலுள்ள சுசீலா என்கிற 18 வயது பெண் ஒருத்தி கடந்த ஒன்பது மாதங்களாக ஆகாரம் ஒன்றும் சாப்பிடாமல் கூடகு தனலக்ஷ்மி போல் அதிசயப் பெண்ணாகிக்கொண்டு வருவதாகவும் ஆனால் இப்பெண் தண்ணீர் அருந்துகிறாளென்றும், இந்த அதிசயப் பெண் மிகவும் பலவீனமாக இருப்பதாகவும், டாக்டர்கள் இப்பெண்ணை பரிசோதிக்க வேண்டுமென்றும் பார்லிமெண்டிலுள்ள கம்யூனிஸ்டு உறுப்பினரான பி. ராகவராவ் தெரிவித்தார்.

—:o:—

மீண்டும் காஷ்மீர் பற்றி பேசுவார்களாம்!

கொழும்பு, ஏப். 27—

ஆசியப் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இங்கு வந்துள்ள, இந்தியப் பிரதமர் நேருவும்; பாக். பிரதமர் முகமது அலியும் அதிகாரப் பற்றற்ற முறையில், காஷ்மீர் விவகாரம் குறித்து விவாதிக்கலாம் என்பது உறுதி என்று இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பாக். பிரதமர் முகம்மதலி 'புதுடில்லியில் நாங்கள் விட்ட இடத்திலிருந்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடங்கலாம்' என்றும், பிரதமர் நேருவும், தான் எதுபற்றியும் பேசத் தயாராயிருப்பதாயும் கூறியுள்ளனர்.

மதுவருந்த மாலடோவிற்கு பிரெஞ்சு மந்திரி அழைப்பு

சீனப் பிரதமரை அழைக்காததால் சோவியத் மந்திரி மறுப்பு

ஜெனீவா, ஏப். 26—

ஜெனீவா மாநாட்டிற்குவந்துள்ள சோவியத் வெளிநாட்டு மந்திரியான மாலடோவை, தாம் நடத்தும் மது விருந்தில் கலந்து கொள்ளுமாறு பிரான்சு வெளிநாட்டு மந்திரி பிதால்ட் அழைப்பனுப்பினர். அதுபோலவே, அமெரிக்க பிரதிநிதி டல்லசுக்கும், பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஈடனுக்கும், அவர் அழைப்பு அனுப்பியிருந்தார். சோவியத் மந்திரி நீங்கலாக மற்ற இருவரும் அழைப்பை ஏற்றுக் கொண்டனர்.

சீனப் பிரதமர் ஷோ-யென்-லெய்யுக்கு அழைப்பு அனுப்பாததைக் காரணமாகக் காட்டி, மது விருந்தில் கலந்து கொள்ள முடியாது என சோவியத் மந்திரி மாலடோவ் கூறிவிட்டார்.

ஜினிவா மாநாடு

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

ஜினிவா, ஏப். 27—

ஜினிவா மாநாட்டின் இரண்டாம் நாளாகிய இன்று ரஷிய அயல் நாட்டு மந்திரி மாலடோவ் தலைமையில் ஆரம்பமாயிற்று.

கொரியாவுக்கு படையனுப்பிய தேசங்களும், சீனு, ரஷியா, வட கொரியாவும் இன்றைய மாநாட்டில் கலந்துகொண்டன.

முதலில் தென் கொரியப் பிரதிநிதியும், பிறகு வட கொரியப் பிரதிநிதியும் கலந்துகொண்டனர்

தென் கொரிய அயல் நாட்டு மந்திரி பியுங்-டாங் பேசுகையில் கூறியதாவது:—

"உலகத்தில் சமாதானம் நிலவச் செய்வதில் கம்யூனிஸ்டுகளுக்கு முழு பொறுப்புண்டு. அதை அவர்கள் செயல்மூலம் நிரூபிக்க வேண்டும்" என்றார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"சீனக் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிப்பதற்கு முன்னாலேயே வட கொரியாவில் ஐ. நா. படைகள் இருந்தன. வட கொரிய ஆக்கிரமிப்பாளரை தண்டிக்கும் போலீசு நடவடிக்கையில் அப்படைகள் ஈடுபட்டிருந்தன.

"அந்தப் போலீசு நடவடிக்கை பூர்த்தியான பிறகுதான் ஐ. நா. படைகள் வெளியேறும்.

"சீனக் கம்யூனிஸ்டுகளின் ஆக்கிரமிப்பாளரின் வெளியேற்றத்துடன், ஐ. நா. படைகளின் வெளியேற்றத்தை ஏன் முடிச்சுபோட வேண்டும் என்பது தெரியவில்லை. போலீசுக்காரன் ஏக காலத்தில் ஆயுதத்தைக் கைவிட்டால்தான் தனது ஆயுதத்தைக் கைவிட முடியும் என ஒரு திருடன் கூறுவதுபோலவே இருக்கிறது இது" என்று கூறினார்

வட கொரிய பிரதிநிதி இன்றைய கூட்டத்தில் கீழ்க்கண்ட ஐந்து திட்டத்தை சமர்ப்பித்தார்:

(1) தேர்தல் சட்டங்கள்பற்றி பரிசீலிப்பது. (2) வட, தென் கொரியா இடையே கலாச்சார உறவை அபிவிருத்தி செய்வது. (3) எல்லா அந்நியத் துருப்புகளையும் ஆறு மாதத்திற்குள் வெளியேற்ற ஏற்பாடு செய்வது. (4) கொரியா தனது உள்நாட்டு அரசியல் விவகாரங்களை தானே பைசல் செய்துகொள்வதற்கு இடையூறாக அந்நியத் தலையீடு வாராதபடி தடுப்பது.

இந்தோ — சீன சமாதானப் பேச்சு

எட்டு நாட்களில் ஆரம்பமாகலாம்

ஜினிவா, ஏப் 27—

இன்னும் எட்டு நாளில் இந்தோ - சீன சமாதான பேச்சு ஆரம்பமாகலாமெனத் தெரிகிறது.

ஜினிவா மாநாட்டில் இந்தோ-சீனப் பகுதியை ஏற்பாடு செய்வது பற்றியும் இப்பேச்சுக்களில் எந்த ராஜ்யங்கள் கலந்து கொள்ளுமென்பது பற்றியும் இன்று நடந்த பிதோ, மாலடோவ், ஈடன், டல்லஸ் இவர்கள் சந்திப்பின் சம்பாஷணையின் போது பிரஸ்தாபிக்கப்பட்டதாம்.

இந்தோ — சீன போர் நிறுத்தம்

பிரிட்டன் கருத்து

ஜினிவா, ஏப். 27—

ஒரு திட்டமான அரசியல் உடன்பாடும் உடனடியாக ஒரே நேரத்தில் செய்யப்பட்டாலன்றி, இந்தோ - சீனாவில் போர் நிறுத்தம் செய்வதை மிகவும் அதிருப்திகரமான ஒன்று என்றே பிரிட்டன் கருதுமென்று தெரிகிறது.

இதற்கு முன்பாக, இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் மக்கள் சபையில் பேசுகையில், "சென்ற வாரம் நடைபெற்ற, மேற்கத்திய நாடுகளின் வெளிநாட்டிலாகா மந்திரிகளின் மாநாட்டில், இந்தோ - சீனு பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை; காரணம் சமீபத்தில் நடக்கவிருக்கும் ஜினிவா மாநாடு நடைபெறவிருக்கிறதால்," என்று கூறினார்.

முன்னாள் கவர்னரின் தங்கை மர்ம மரணம்

குன்னூர், ஏப். 27—

மிஸ் மார்ஷ்பாங்ஸ், நேற்று காலை அவரது படுக்கை அருகில் தொண்டை அறுக்கப்பட்டு இறந்து கிடந்தார்.

இவருக்கு சுமார் 80 வயது இருக்கும். இங்கு இவர் தனியாக வசித்து வந்தார். இவர், சென்னையில் சிறிது காலம் ஆக்டிங் கவர்னராக இருந்தவர். நார்மன் மார்ஷ் பாங்ஸின் சகோதரியாவார்.

போலீசார் புலன் விசாரிக்கின்றனர்.

'தேர்தல் காலத்தில் இதர கட்சிகளோடு எந்த ஒப்பந்தமும் செய்துகொண்டதில்லை'

— (:) —

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிறார்!

கழகக் கூட்டங்கள்

★

குரும்பேரி

30—4—54 மாலை 7 மணிக்கு

இடம்: பஞ்சாயத்து ஆரம்ப பள்ளிக்கூடம்

தலைவர்: டி. அண்ணாமலை

பேசுபவர்:

க. அன்பழகன்

★

நாமக்கல்

30—4—54 மாலை 7 மணிக்கு

இடம்: திரு வி. க. பாறை

தலைவர்: கந்தசாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

திறப்பு விழா

30-4-54 பகல் 10 மணிக்கு குரும்பேரி, பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் திருவள்ளுவனுர் நூல் நிலையத்தை, தோழர் கே. எல். ரத்தினவேலு தலைமையில் தோழர் க. அன்பழகன் திறந்து வைப்பார். தோழர்கள் டி. அண்ணாமலை, மா. மாரப்பன் ஆகியோர் பேசுவர்.

மந்திரியானேன்! வெற்றி பெற்றேன்!

ராமசாமியின் மந்திரிப் பேச்சு!

சென்னை, ஏப். 27—

"காங்கிரஸ் கட்சியுடன் அரசியல் விஷயத்தில் எங்களுக்கு எப்பொழுதும் எத்தகைய கருத்து வேற்றுமையோ, முரண்பாடோ கிடையாது. பிற்பட்ட வகுப்பினருக்கு குறிப்பாக வன்னியகுல க்ஷத்திரிய வகுப்பினருக்கு ஆட்சி முறையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை."

—இவ்வாறு, ஸ்தல ஸ்தாபன மந்திரி எஸ். எஸ். ராமசாமி படையாச்சி நிருபர்களிடம் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"எந்த சர்க்கார் இருந்தாலும் எங்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

சட்டசபை தேர்தலின்போது தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி எந்த இதர கட்சிகளோடும் எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. காங்கிரசை விரோதித்த கட்சிகள் தாங்களாகவே எங்களுடன் சேர்ந்து கொண்டன.

பிற்பட்ட மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைக்கும்போது அதை செய்யாமலிருப்பது குற்றம் என்றே கருதுகிறேன் என்று தெரிவித்தார்

உழைப்பாளி கட்சியிலேயே சில நபர்கள், 'நீங்கள் மந்திரி சபையில் சேர்ந்ததை கண்டிக்கின்றார்களே' என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"கோபால கவுண்டர் ஒருவர்தான் அம்மாதிரி பேசுகிறார். எங்கள் கட்சி அவரை வெகுகாலமாகவே புறக்கணித்துவிட்டது. அவரது வயதையும், கௌரவத்தையும் முன்னிட்டு கட்சியிலிருந்து அவரை வெளியேற்றும் தீவிர நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளவில்லை அவ்வளவுதான்" என்றார்.

கிடைத்த அன்னிய — — செலாவணி ரூ. 2 கோடி

வெளிநாட்டில் செலவழித்ததோ ரூ. 11 கோடி

புதுடெல்லி, ஏப். 27—

இந்தியாவில் உல்லாச பிரயாணம் செய்த வெளிநாட்டார் மூலம் 1952-ம் ஆண்டில் இந்தியாவிற்கு ரூ 25 கோடி கிடைத்தது ஆனால் அதே காலத்தில் வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்த இந்தியர்கள் செலவழித்துத் தொலைத்த வெளிநாட்டுச் செலாவணி வசதியின் மதிப்போ ரூ 10 72 கோடியாக இருக்கிறது.

இப்பெருஞ் செலவு உல்லாச பிரயாணத்திலேயே செலவிடப் பட்டிருக்கிறது என்றும், கல்வி பெறுவதற்காக வெளிநாடுகளில் உள்ள மாணவர்கள் செலவழித்துள்ளது, இச்செலவில் சேர்க்கப்படவில்லை என்றும் துணை மந்திரி அழகேசன் அறிவித்தார்.

இந்தியாவில் இதுவரை கிடைத்துள்ள அதிகபட்ச ஏகர் விகித கரும்பு உற்பத்தி 128 டன் ஆகும்; ஆனால், சராசரி ஏகர் விகித உற்பத்தி 12 டன்னேயாகும்;

சர்க்கரை விலையை ஒழுங்குபடுத்த

சர்க்காரின் 5 அம்சத் திட்டம்

புதுடில்லி, ஏப். 27—

சர்க்கரையை ஒழுங்காக விநியோகிப்பதற்கும், விலையை ஒரே நிலையாக நிறுத்துவதற்கும் 5 - இனங்கள் கொண்ட ஒரு கொள்கையை அரசாங்கம் கையாள உத்தேசித்துள்ளது, என்று இன்று மக்கள் சபையில் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் உணவுத் துணை அமைச்சர் அறிவித்தார். அந்த அம்சங்களாவன :-

(1) வெளிநாடுகளிலிருந்து தேவையான அளவு சர்க்கரையை இறக்குமதி செய்தல்.

(2) சேமிப்பிலிருந்து நாடு முழுதுக்கும் சர்க்கரை வழங்கல் ரயில்வேக் கட்டணம் உட்பட வெளியூர்களுக்கு இறக்குமதியான சர்க்கரையிலிருந்து மணங்கு ஒன்றுக்கு ரூ. 31 வீதம் ஒரே மாதிரியான விகிதத்தில் அளித்தல்.

(3) 1954 செப்டம்பர் மாதம் வரை, கட்டுப்பாடில்லாமல் விற்பனை செய்வதற்காகத் தொழிற்சாலைகளிலிருந்து சர்க்கரையை வெளிவிடாதிருத்தல்.

(4) விற்பனைக்காக அனுமதிக்கப்பட்ட சர்க்கரையை அனுப்பி வைக்குமாறு தொழிற்சாலைகளை அரசாங்கம் கேட்டுக்கொள்ளும்.

(5) கையிருப்பு சர்க்கரையை 1954 மே மாதம் 31-ந் தேதி வாக்கில்லாமல் செய்யும்படி சேமித்து வைத்திருப்பவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவர். விற்கப்படாமலிருக்கும் சர்க்கரையைக் குறிப்பிட்ட நாளுக்குப் பிறகு வேண்டும்போது அரசாங்கம் அதை எடுத்துக் கொள்ளும்.

போபால் முதல் மந்திரி மீது கல்வீச்சு

போபால், ஏப். 25—

இங்கிருந்து 30 மைல் தூரத்தில் மாநில நிதி மந்திரி வி. கம்தா பிரசாத்தின் சொந்த ஊரான பெய்சன் நகரில் ஒரு பொதுக் கூட்டத்தில் முதன் மந்திரி எஸ். டி. சர்மா அவர்கள், கம்தா பிரசாத்திடம் ராஜிகுமாரியின் அபிப்ராயத்தை விளக்கிப் பேசுகையில், கூட்டத்திலிருந்த ஒருவர் அவர்மீது கல்லை வீசி எறிந்தார். முதன் மந்திரி எந்தவிதக் காயமுமின்றி தப்பித்துக் கொண்டார்.

★★

சேலம் மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைத்துள்ள பரசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

மே 1: சனிக்கிழமை	மே 2: ஞாயிற்றுக்கிழமை
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: தோழர் ப. உ. சண்முகம்	தலைவர்: தோழர் இரெ. இளம்வழுதி, M. A., B. L.
துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன், B. A., B. L.	துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி: ரூ. 3; ஆதரவாளர்: ரூ. 2; பார்வையாளர்: ரூ. 1; பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

★★

அண்ணாதுரை அறிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இயக்கம் பொதுமக்களுக்கு உதவி செய்ய முடிவதில்லை. சர்க்கார் ஊழியர்கள்—அதிகாரிகள் நல்ல முறையில் மேற்பார்வை இட்டு ஊழல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"சமீபத்திலே 'சமூக துரோகிகள்' என்ற தெலுங்கு படம் ஒன்றைப் பார்த்தேன். அந்தப் படத்தில் கூட்டுறவு முறையால் நடைபெறும் ஊழல் அத்தனையும் காட்டப் படுகின்றது. சுரண்டல் மனப் பான்மை உள்ள சுயநல சூதாடிகள் புகுவதால் கூட்டுறவு முறை சீர்கெட்டு அழியும். மேற்பட்ட புல்லுருவிகள் தமிழ் நாட்டிலே பரவாது தடுக்க வேண்டும். ரூ. 5 கட்ட முடியுமானால் கட்டி, அங்கத்தினராகி ஊழல் இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டும். இந்த பொன் விழா அதற்கு பயன்பட வேண்டும். இந்த கூட்டுறவு இயக்கங்களில் வாலிப தோழர்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். செயலாளராக, தலைவராக இருக்க முன் முன் வரவேண்டும். சில இடங்களில் சொசைட்டி தலைவர்களை பார்த்திருக்கிறேன் அவர்களுக்கு அதன் வளர்ச்சியிலோ, முன்னேற்றத்திலோ அக்கறை இருக்காது. வரவு செலவுகள் எல்லாம் வீட்டில்தான் பார்க்கப்படும். மேற்பார்வையிடும் அதிகாரிகளும் அவர் பெரிய மனிதர், கௌரவமானவர் என்பதால் பயந்து வீட்டிலே சென்று கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்று விடுவார்கள். அந்த நிலையில் இந்த ஊர் தலைவர்கள் இல்லையென்று உறுதியாய் நம்புகின்றேன்.

இந்த கூட்டுறவு முறை நமக்கு சொந்தம், எல்லோருக்கும் சொந்த இயக்கம் என்று அக்கறை காட்டி வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும். நல்ல உழைப்பும் தொண்டுமிருந்தால் வளர்ச்சி தானாகவே அடையும். மேல் நாட்டார்கள் தந்த பொருள் தான் நாட்டை இன்று சூழ்ந்து இருக்கிறது. தொழில் வளர்ந்து மக்கள் இனம் நல்வாழ்வு அடைய விஞ்ஞானத்தை பரப்பவேண்டும்.

மேல் நாட்டைப் போல நாம் அகல் விளக்கோடு இருந்த பொழுது அகல் விளக்கு போதாதென்று வெளிநாட்டான் அரிக்கன் விளக்கைக் கண்டு பிடித்தான். அரிக்கன் போதாதென்று பெட்ரோமாக்ஸ் கண்டு பிடித்தான். பெட்ரோமாக்ஸ் போதாதென்று எலக்ட்ரிக் கண்டான் இன்று அதுவும் போதாதென்று காலையிலே கிடைக்கும் சூரிய ஒளியை சிரகித்து இரவில் ஒளியை அடைய திட்டம் கண்டு ஆராய்கிறார்கள். கட்டை வண்டி நீக்கி, குதிரை ஓட்டமேறி போதாதென்று மோட்டார் கண்டான். மோட்டார் போதாதென்று ஆகாயத்திலே பறக்கும் விமானம் கண்டான். நாம் இன்னும் மஞ்சள் பூசி, குங்குமத்தை மேலே தடவிக்கொண்டு இருக்கிறோம்.

நாம் நாள் முழுதும் உழைக்கிறோம், அவன் விஞ்ஞானத்தால் வளர்கிறான்.

சாமியாராகாதவர் கண்டனம்!

"இந்த இயக்கம் அஞ்ஞானத்தில் நாம் இருக்கும்வரை அதிகமாக பலன், சரியான முறையில் அளிக்காது. திருச்சியிலேயிருந்து வரும் வழியிலே, 'பொருத்தாங்குடி' என்ற ஊருக்குக் கும்பல் கும்பலாக மக்கள் போகின்றார்கள். கையிலே பச்சிளம் குழந்தை, வயிற்றிலே சிசு, உடல் நலம் கெட்டவர்கள் எல்லோரும் போகின்றார்கள். 'அங்கு செல்கின்றீர்களே!...எதற்காக?' என்றால், 'அங்கு ஒரு சாமியார் இருந்தார்; அவர் ஒரு நாயை வளர்த்து வந்தார்; அந்த நாய்க்கு வெறி பிடித்து அங்கிருந்த பூனையைக் கடித்தது பூனை வெறி கொண்டு சாமியாரைக் கடித்தது. சாமியார் இறந்து விட்டார். அவர் சமாதிதான் இன்று இருக்கிறது அங்கு சென்று திருநீறுச் சாம்பலை பூசிக்கொண்டால் துடிம்பம் உயரும்; குழந்தை சுகப் பிரசவம் ஆகும்; வியாதி பறக்கும்,' என்கின்றனர். இதைப் போன்று மக்கள் மூட நம்பிக்கையில் ஆழ்ந்திருந்தால் எப்படி அறிவு வளரும்? கூட்டுறவு முறை தழைக்கும்?

"பூனை கடித்து சாகாத, சாமியாராகாத, வெளிநாட்டான், பாடும் ரேடியோவும், வேகமாக ஓடும் ரயிலும் கண்டு பிடித்து இருக்கிறான். ஆகையினால்தான் நான் கூறுகிறேன் மேல்நாட்டான் தந்த கருத்துக்களில் தேவையானவற்றை ஒன்றாக நன்முறையில் வளர்த்தால் நாமும் வாழலாம். வெளிநாட்டிலே உழைக்கும் தொழிலாளி வீட்டில் படிக்க பத்திரிகை உண்டு. பாட்டு கேட்க ரேடியோ உண்டு ஓய்வும், இன்பமாய் வாழ வழியும் உண்டு. இங்கு தொழிலாளர்கள் கோழி கூவும் நேரத்திலே எழுந்து, கோட்டான் கூவும் இரவு வரை உழைக்கிறார்கள் மனைவியைத் தட்டியெழுப்பாது காலையிலே போகிறவன் இரவு அயர்ந்து தூங்கும் மனைவியை எழுப்பலாமா வேண்டாமா என்ற களைப்புடன் படுக்கிறான். இந்த நாட்டில் நெய் சுவை அறியாத குடும்பம், பழம் சாப்பிடாத குடும்பங்கள் எத்தனை லட்சம், கணக்கிட முடியாது! மேல் நாட்டானைவிட இவன் உழைப்பு குறையவில்லை. பல முறையிலும் அதிகமாக உழைக்கிறான். பலன் காண முடியவில்லை. அதனால் விஞ்ஞானத்தைப் பரப்பி வாழ வேண்டும் என்கிறோம் இங்கிருக்கும் வெளிச்சம் பல்லோரை பரவசமூட்டுகிறது 15 ஆண்டுகளுக்கு முன் இந்த ஒளியைப் பெற, 15 பேர் திவட்டியைப் பிடிக்க வேண்டும். 15 பேர் அதற்கு எண்ணெய் ஊற்ற வேண்டும் 15 பேர் நெருப்பு அருகிலிருப் பேர் மேல் படாமல் காக்க வேண்டும். இதைப்போன்று சுமார் 60 பேர் செய்யும் வேலையை ஒரு பெட்ரோமாக்ஸ் சாதிக்கிறது. உலக அதிசயங்கள் எல்லாம் வெளிநாட்டாரால்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றன ரயில், ரேடியோ ஒலிபெருக்கி முதலியன போன்று நாமும் காண வேண்டும். நாமும் உலகத்துக்கு புதுக் கருவிகளை அனுப்ப முடியும் என்பதை உணர வேண்டும். கூட்டுறவு முறை என்ற இந்த மேலான செல்வத்தைப் போற்றி வளர்த்து நாம் ஆதரிக்கவேண்டும். இந்தக் கூட்டுறவு இயக்கம் இந்தியா பூராவும் பரவி இருந்தாலும், நம் நாட்டில் தான் உற்சாகமாக வளர்ந்து இருக்கிறது. தமிழ் நாட்டில் தான் பரவி இருக்கிறது. மென்மேலும் வளர்க்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கு பொதுமக்கள் திரண்டு ஆதரவு தரவேண்டும் என்று கூறி முடிக்கிறேன்.'

தொழிற்சிக்கனம் இப்பொழுது வேண்டாம்

ஆலைகளை அரசாங்கமே ஏற்க அரசியல் சட்டத்தைத் திருத்துக

ஆலைத் தொழிலாளர் கூட்டத்தில் வாசவதா

கோவை, ஏப் 25—

உற்பத்தியைக் குறைப்பது அல்லது, அநேக தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்வது ஆகிய செயல்புரியும் துணி ஆலைகளின் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்று நடத்த வசதி இருக்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்.

குடிசைத் தொழில்களுடன் பெரும் மூலதனத் தொழில்களைத் தக்க முறையில் இணைந்து போகுமாறு செய்ய, கிராமக் குடிசைக் கைத்தொழில்களினால் ஆலைக்குத் தேவையான துணைக் கருவிகள் செய்யப்படுவதற்கு ஒரு திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

ஆலைத் தொழிலில் தொழிற் சிக்கனத்தை இன்னும் 10 ஆண்டுகளுக்காவது புகுத்தக்கூடாது. தானியங்கி விசைத் தறிகள், முறுக்கேற்றும் இயந்திரங்கள் ஆகியவை புகுத்தப்பட்டுவிட்டால், இப்பொழுதிருக்கும் 7½ லட்சம் தொழிலாளர்களுக்குப் பதிலாக 2 லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் இத்தொழிலுக்கு தேவை இராது.

—இவ்வாறு, இந்திய தேசிய ஆலைத் தொழிலாளர் சம்மேளனத்தின் ஆறாவது ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசியபோது திரு. வாசவதா கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியதின் சுருக்கமாவது:

உற்பத்தியைக் குறைப்பது அல்லது அநேக தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்வது ஆகிய செயல்கள் புரியும் துணி ஆலைகளின் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்று நடத்த வசதி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறார்.

ஒரே இடத்தில் ஆலைகள் குவிவதைத் தடுத்துத் தொழிலாளர் நலனைக் கருதி வேலையற்றோர்களுக்கு வேலை தரும் முறையில் மூலதனம் போடப்படவேண்டும் என்பது நமது கருத்து. பொருளாதார நிபுணர்கள் வேறு விதமாகவும் கருதக்கூடும். இத்துறையில் செய்யப்படும் முயற்சிகளுக்கு இந்திய தேசிய ஆலைத் தொழிலாளர் சம்மேளனத்தின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடிசைத் தொழில்களுடன் பெரும் மூலதனத் தொழில்களைத் தக்க முறையில் இணைந்துபோகுமாறு செய்ய கிராம குடிசைக் கைத் தொழில்களினால் ஆலைக்குத் தேவையான துணைக் கருவிகள் செய்யப்படுவதற்கு ஒரு திட்டம் அமைக்கப்படவேண்டும். ஆலைகளுக்குத் தேவையான அநேக பொருள்கள் இந்தியாவிலேயே செய்யப்படுமானால் குடிசையிலே வாழும் மக்களுக்கும் ஏராளமான கைத் தொழில்களுக்கும் உதவியாக இருக்கும்

விஞ்ஞான ஆராய்ச்சியை ஆலைத் தொழிலாளர்கள் எதிர்க்கவில்லை. ஆலைத் தொழிலில் தொழிற் சிக்கனத்தை இன்னும் 10 ஆண்டுகளுக்காவது புகுத்தக் கூடாது என்று ஆலைத் தொழிலாளர் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

தானியங்கி விசைத் தறிகள், முறுக்கேற்றும் இயந்திரங்கள் ஆகியவை புகுத்தப்பட்டுவிட்டால் தற்பொழுதுள்ள 7½ லட்சம் தொழிலாளர்களுக்குப் பதிலாக 2 லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் இத்தொழிலுக்குத் தேவையிராது. நாட்டின் பொருளாதார அமைப்பைக் கருத்தில் வைத்துக் கொண்டு தான் தொழிற் சிக்கனம் பற்றிய சிக்கல் ஆலோசிக்கப்படவேண்டும்! நாட்டிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டிய இந்த நேரத்தில் ஆலைத் தொழிலுக்குத் தேவையான வேலையாட்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அறிவுடைமைக்கேற்ற கொள்கையாகாது.

புதிய இயந்திரங்கள் அமைக்கப்பட்ட ஆலைகள் பழைய இயந்திரங்களுடன் கூடிய ஆலைகளுடனும் கைத்தறித் தொழிலுடனும் போட்டியிட்டு அத்தொழில்கள் மூடப்படநேரும் என்பதையும் சிந்திக்க வேண்டும். தொழிற்சிக்கனத்தை அப்படியே நாம் எதிர்க்கவில்லை. அதனால் தொழிலாளர்கள் தங்கள் வேலையை இழந்துவிடக் கூடாது என்றும் தொழிற் சிக்கனத்தால் வரும் இலாபத்தில் 50 சத விகிதம் தொழிலாளர்கள் அடையவேண்டும். புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு நாட்டில் தொழில் வாய்ப்புகள் பெருகிய பின்னரே தொழில் சிக்கனங்கள் கையாளப்படவேண்டும்.

இந்திய ஆலைத் தொழிலுக்கு உண்மையான உரிமையாளர்கள் இந்நாட்டு மக்களே என்பதை மனதில் வைத்துக்கொண்டு மக்களுக்கு செய்யவேண்டிய தொண்டைத் தொழிலாளர்கள் மறந்துவிடக் கூடாது என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் பண்டிதர் — தண்டனை பெற்றார்

கோவை, ஏப். 25—

மேட்டுப்பாளையம் மகாஜன உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரான திரு. டி. கே. ரத்தினம் என்பவரை கடந்த நவம்பர் மாதம் 16-ந் தேதியன்று அந்தப் பள்ளி தமிழாசிரியர் தாக்கியதாக, குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, தமிழாசிரியருக்கு ரூ 50 அபராதம் விதித்தார்.

கான்பூரில் தேர்தல் கலவரம்

கான்பூர், ஏப். 26—

கான்பூர் மாவட்ட மத்திய தொகுதியிலிருந்து மக்கள் சபைக்கு ஒரு பிரதிநிதிக்கான தேர்தல் நடைபெறுகையில், தேர்தல் அதிகாரிகளைத் தாக்கியும், 144 தடை உத்திரவுச் சட்டத்தை மீறிக் காரியங்களில் ஈடுபட்டதாயும், தேர்தலில் முறையற்று நடந்து கொண்டதாயும் குற்றஞ்சாட்டப்பட்டு உ. பி சட்டசபை எதிர்க் கட்சித் தலைவரான திரு. ராஜ் நாராயணன் உள்ளிட்ட 32 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பால்வழங்கும் மிருகங்கள் எண்ணிக்கை

பெங்களூர், ஏப். 25.—

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கிய நகரங்களில் பால் விற்பனை போர்டுகள் அமைத்து பால் விற்பனையை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்தும் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதை பெங்களூரில் உள்ள பால் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் "பால் பொருளின் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி" என்பதைப் பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசுகையில் இந்திய சர்க்கார் விவசாய மந்திரி அறிவித்தார்.

பால் பண்ணைகள் பற்றி குறிப்பிடுகையில் பால் வழங்கும் மிருகங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டார்:—

410 லட்சம் பசுக்கள்; 197·5 லட்சம் எருமைகள்; 80 லட்சம் ஆடுகள் உள்பட மொத்தம் 687 7 லட்சம் என்றும், பால் உற்பத்தி 1,71 51 லட்சம் டன் என்றும், பால் பொருள்களின் வருடாந்திர பண மதிப்பு 800 கோடி ரூபாயென்றும், பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகள் தவிர தேசத்தில் 150 பால் பண்ணைகள் உள்ளன வென்றும், நகர் புறங்களுக்கு பால் வழங்க சுமார் 30 கூட்டுறவு யூனியன்களும் 700 சொஸைடிகளும் உள்ளன என்றும் தெரிவித்தார்.

துவரம்பருப்பு சாகுபடி

கடைப்பு ஆண்டில் துவரம் பருப்பு சாகுபடி விஸ்தீர்ணம் 57 14,000 ஏக்கராவும் உற்பத்தி அளவு 18 04 000 டன்னுகவும் இருக்குமென்று தெரிகிறது. 1952—53-ம் ஆண்டில் சாகுபடி விஸ்தீர்ணம் 55,71,000 ஏக்கராவும், உற்பத்தி 17,60,000 டன்னுகவும் இருந்தன.

செங்கோட்டை தி. மு. கழகம்

14—4—54 புதன் கிழமை பகல் 2-30-மணிக்கு செயற்குழுக் கூட்டம் தோழர் என். எஸ். முத்தையா தலைமையில்கூடி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: பி. எப். சாமுவேல்; துணைச் செயலாளர்: சாகுல் அமீது; பொருளாளர்: என். எஸ். முத்தையா; விளம்பர உறுப்பினர்கள்: சின்னு, முன்தபா.

புதுவை மக்களின் விடுதலை போராட்டத்தை ஆதரித்தும், புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடுமாறு சென்னை அமைச்சரவையைக்கேட்டுக்கொண்டும், இந்தியைப்பிரிய பாடமாக ஆக்கும்படியும், அரிசி மில்களை தடை செய்யும்படியும், திரு—கொச்சி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டும், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டது.

கல்வி முறையில்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி முறையில் மாற்றங்கள் செய்வதானால் அவை வெகு நன்கு யோசித்து சிறிது சிறிதாகச் செய்யப்பட வேண்டுமே யன்றி, இப்போதுள்ள கல்வி முறையில் தடாலென மாற்றங்கள் செய்வது கூடாது" என்றும் எச்சரித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ஞானிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,